2021 பிப்ரவரி 25]

25—

பெருந்தொழிற்சாலைகள்

***66660—திரு. செ. சண்முகையா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் பெருந்தொழிற்சாலைகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

32 ஆண்டுகால அரசியல் வரலாற்றில், ஆளுகின்ற கட்சியை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்திய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 37 ஆண்டுகால அரசியல் வரலாற்றில், ஆளுகின்ற கட்சியை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தவிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் பெருந்தொழிற்சாலைகள் துவங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், பெருந்தொழில் முதலீட்டாளர்கள் யாராவது தொழில் தொடங்க தேவையான நிதி ஆதாரங்களுடன் முன்வந்தால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை TIDCO *நிறுவனத்தின் மூலமாக செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அவர்களுடன் இணைந்து, திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, பெருந்தொழிற்சாலைகளை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு பெரும் தெய்வங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்குகிறேன். தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர், குடிமராமத்து நாயகர், காவேரி காப்பாளர், சிலுவம்பாளையத்து சிங்கம், தமிழகத்தின் தங்கம், 'தமிழன், தமிழன்' என்று கூறி தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் சிலர் மத்தியில், உண்மையிலேயே தமிழினக் காப்பாளராக உள்ளவர் பச்சைத் தமிழன் திரு. எடப்பாடியார் அவர்கள்தான் என்று சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள ஆண்டிமடம் ஒன்றியத்தைத் தனி தாலுகாவாக அம்மா அவர்கள் அறிவித்தார்கள். 'தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும்' என்ற பழமொழிக்கு ஒரே சொந்தக்காரர், மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்கள்தான் என்று சொல்லிக்கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டிமடம் தாலுகாவைத் தொடங்கி வைத்தது மாண்புமிகு முதல்வர் திரு. எடப்பாடியார் அவர்கள்தான். 40 ஆண்டுகளாகப் போராடி வந்த நிலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கட்டடம் கட்டுவதற்காக 22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டவரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள்தான். 18 கோடி ரூபாய் ஒதுக்கி மகப்பேறு மருத்துவமனை அமைப்பதற்கு ஆணையிட்டவரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள்தான். 50 ஆண்டுகளாக ஜெயங்கொண்டம் தொகுதி மக்களின் ஏக்கத்தைப் போக்கி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கிய முதல்வர் திரு. எடப்பாடியார் அவர்களுக்கு கோடானு கோடி நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தின் அனைத்து மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்றிருக்கும் மாண்புமிகு முதல்வர் திரு. எடப்பாடியார் அவர்கள் 2021–ல் மட்டுமல்ல; தொடர்ந்து தமிழகத்தின் முதலமைச்சராகத்தான் இருப்பார் என்று தமிழக மக்கள் அத்துனை பேரும் கூறுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரை நான் வணங்குகிறேன். இதற்கெல்லாம் உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். தொழில்

2021 பிப்ரவரி 25]

துறையிலே மிகச் சிறப்பாக செயல்பட்டு, நல்ல வளர்ச்சியைத் தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் மாவட்டக் கழகச் செயலாளரும், அரசு தலைமைக் கொறடாவாக இருக்கும் திரு. சு. ராஜேந்திரன் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் அனல்மின் நிலையம் அமைப்பதற்காக 1997–ல் 13 கிராமங்களில் 9,000 ஏக்கருக்குமேல் நிலத்தைக் கையகப்படுத்திய நேரத்தில், மக்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.9,000/–, ரூ.10,000/– என்ற அளவில்தான் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது. 1997–க்குப் பிறகும் மக்கள் அங்கேயுள்ள வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள்; ஆனால், உரிமையில்லை. நிலத்திலே பயிர் செய்கிறார்கள்; ஆனால் எந்த உரிமையும் இல்லை. அங்கே எந்த மேம்பாடும் செய்ய முடியாமல், குழந்தைகளைப் படிக்க வைக்க கடன்கூடப் பெறமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், இரண்டு கிராமங்களிலே உள்ள மக்களிடம் ஒரு ஏக்கர் 8 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே பேசி, ஒரு சமாதானத் தீர்வு கண்டுள்ளார்கள். ஆனால், அதற்கும் இன்னும் பணம் வழங்கப்படவில்லை. பாராளுமன்றத் தேர்தலின்போது, அந்த 13 கிராம மக்களும் தேர்தல் புறக்கணிப்பு செய்தார்கள். எனவே, இந்தத் தேர்தலுக்கு முன்பாக, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இணைந்து அந்த ஏழை விவசாயிகளுக்கு நல்லதொரு முடிவினை எடுத்து, அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவார்களா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் நிலக்கரி நிறுவனத்திற்குண்டான நிலம் (J.L.L.) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மூலமாகக் கையகப்படுத்தப்பட்டு, அதற்கு ஒரு தீர்வு கண்டுள்ளார்கள். அந்தத் தீர்வு கண்டதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக இரண்டு*

ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தைக் கையகப்படுத்த 45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது நிதித் துறையில் அதற்கான கோப்பு உள்ளது. J.L.L.–க்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்குண்டான பணத்தை, உடனடியாகப் பெற்று காட்டாத்தூர் மற்றும் கூவாத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளுக்குட்பட்ட அனைத்து மக்களுக்கும்—யார், யார் நிலம் கொடுத்தார்களோ, அந்தப் பகுதி மக்களுக்கு—உடனடியாக பணத்தை நேர் செய்வதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும். அடுத்து, பகுதி, பகுதியாக, அடுத்த பகுதியிலுள்ள மக்களுக்கும் பணம் நேர் செய்யப்படும். கிட்டத்தட்ட 9 ஆயிரம் ஏக்கர் நிலம் அது. அதில் L.A.O.P. case இருந்தது என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெகேஎன். ராமஜெயலிங்கம் அவர்கள் தொடர்ந்து சட்டமன்றத்தில் இதுகுறித்து வலியுறுத்தியும் உள்ளார்கள். அதன் அடிப்படையில் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டதன் காரணமாகத்தான், இதற்குத் தீர்வு ஏற்பட்டுள்ளது. இது ஒரு நீண்டநாள் பிரச்சினை; கிட்டத்தட்ட 1995 ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சினை உள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் நன்கு அறிவார்கள். அதனடிப்படையில், உடனடியாக காட்டாத்தூர், கூவாத்தூர் உள்ளிட்ட இரண்டு ஊராட்சிகளுக்குண்டான நிதி ஆதாரங்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான கோப்பு நிதித் துறையில் உள்ளது. உடனடியாக அந்தக் கோப்புகள் பெறப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்று, உடனடியாக அதற்குத் தீர்வு காண்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு முடிந்தபிறகு, மீதம் உள்ள அடுத்த பகுதிகளிலுள்ள மக்களின் நிலங்களுக்குண்டான தொகையை நேர் செய்வதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.